# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN


(**ஜாமக்காரனில்**) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15


**VOLUME - 5 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 12**
**DECEMBER 2021 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333**
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




**உன்னை இந்த வருஷமளவும்.... நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக** ... உப. 8:2

இயேசு கிறிஸ்துவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவர் கூறியபடி மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டு சாட்சியுடன் வாழ **இயேசு கிறிஸ்துவின்** புகைப்படத்தையோ **சிலுவையையோ** விலைக்கு வாங்கி வீட்டில் வைப்பதினாலோ நீ கிறிஸ்தவன் என்று கூறிக்கொள்ள உனக்கு உரிமை இல்லை.

கிறிஸ்துவின் உபதேசத்தின்படி எல்லா காரியங்களிலும் வீட்டிலும் வெளியிலும் **உன் சாட்சியை பார்த்து** மற்றவர்கள் உன்னை கிறிஸ்துவைபோல் வாழ்கிற நீ, கிறிஸ்தவன் என்று கூறத்தக்கதாக இருந்தால் மட்டுமே **நீ கிறிஸ்தவன்** எனப்படுவாய்.

**நானே தேவன்** என்பதற்கு **நீங்களே சாட்சிகள்**. ஏசா. 43:12 என்று கர்த்தர் சொன்னார், இந்த சாட்சி உங்களின் வாழ்க்கையில் உண்டாவதற்கு இயேசு கிறிஸ்து **இம்மானுவேலாய் உங்கள் உள்ளத்தில்** இருக்க வேண்டும். **இயேசு கிறிஸ்து** உள்ளத்தில் வந்துவிட்டால் **வாழும் காலமெல்லாம் கிறிஸ்மஸ்தான்.** அப்போது குறிப்பிட்ட தனி ஒரு நாளை **கிறிஸ்துமஸாக** கொண்டாட மாட்டீர்கள். தொடர்ந்து வாசகர்களுக்காக ஜெபிக்கிறேன்.

**உங்களுக்கு எங்கள் புது வருட வாழ்த்துக்கள்.**

- **Dr. புஷ்பராஜ்**

# DECEMBER - 2021

# வேறொரு சுவிசேஷம்

## எச்சரிக்கை !

ஆர்தர் பிங்க்

தேவன் **விதைத்திருந்த நல்ல** விதையின் **நிலத்தில்தானே** பிசாசும் செயல்படுவதைக் காண முடியும். **கோதுமை மணியானது** உருவாகாதபடி, அதனை போலவே ஒத்திருக்கும் பதரைப் **பிசாசு விதைக்கிறான்.** கிறிஸ்துவின் பணியைப் போலவே உள்ள **ஒரு மாதிரியை** காண்பித்து, தேவனுடைய கிரியைகளை அழிக்க பிசாசு முற்படுகிறான், எனவே **கிறிஸ்துவின்** சுவிஷேத்தை ஒத்திருக்கும் பிசாசின் சுவிவேஷத்தை அவன் பிரபலப்படுத்துகிறான். இவ்விரண்டு சுவிசேஷங்களும் **ஒத்திருப்பதுபோல** தோற்றமளிப்பதால், **அநேகர் வஞ்சிக்கப்படுகின்றனர்.**

இந்தத் **பிசாசின் சுவிசேஷத்தைக்** குறித்தே அப்போஸ்தலன் பவுல் கலாத்தியர் 1:6,7ல் குறிப்பிடுகிறார்: ‘‘உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய்விட்டு, **வேறொரு சுவிசேஷத்திற்குத்** திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; **வேறொரு சுவிசேஷம்** இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, **கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப்** புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல.

இந்த **கள்ளச் சுவிசேஷம்** அப்போஸ்தலர்களின் காலத்திலும் அதிகமாய் காணப்பட்டது. எனவேதான் அப்போஸ்தலன் பவுல் இதனை வெகுவாக கண்டிப்பதைப் பார்க்கிறோம் – **‘‘நாங்கள் உங்களுக்கு பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல்**, நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற **ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை** உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்’’ (கலா 1:8).

**பிசாசின் சுவிசேஷமானது,** புரட்சிகரக் கொள்கைகளையோ அல்லது அராஜக திட்டங்களையோ கொண்டதாக இல்லை. இது **பிரிவினைகளையும்,** யுத்தங்களையும் **உண்டாக்குவதுமில்லை.** மாறாக இது **சமாதானத்தையும் ஒற்றுமையையுமே** அதிகமாகப் போதிக்கிறது. இதனால் **தகப்பனுக்கும்,** மகனுக்கும், தாய்க்கும், மகளுக்கும் **பிரிவினை உண்டாகுவதில்லை.** மாறாக அனைத்து மனிதர்களும் சகோதரர்களே என்று உலக சகோதரத்துவத்தைப் போதிக்கின்றது. **ஜென்ம சுபாவமான மனுஷனை** சிலுவையில் அறைவதற்கு மாறாக, **அவனை ஊக்குவித்து** மேன்மைப்படுத்துகின்றது. கல்வியறிவையும், கலாச்சரத்தையும் போதித்து, நம்மிடமிருந்து சிறந்தவற்றை உருவாக்க முற்படுகின்றது.

இந்த பிசாசின் சுவிசேஷம், உலகை **ஆறுதலான** இடமாகவும், **சமூக நல்லிணக்கம்**

நிறைந்தாகவும் உருவாக்கத் தரிசனம் கொண்டுள்ளது. எனவே **கிறிஸ்து அவசியமில்லை என்பதை நிலைநிறுத்த** முற்படுகிறது. **இறைவன் இல்லாமல்** மனிதனால் வாழ முடியும் என்பதை **மையப்படுத்துகிறது**. உலகத்தைக் குறித்த சிந்தனைகளை மனிதருக்குக் கொடுத்து, **அவர்களின் மனதை** முழுவதுமாக **உலகத்தினால் நிறைத்து,** ‘‘ மறுவாழ்வு ’’ உண்டு என்பதனை **மறக்கச் செய்கிறது.** தியாகம், **சமூக சேவை,** கருணை போன்ற **தத்துவங்களைப்** போதித்து **மற்றவர்களுக்காக வாழச் செய்கின்றது.** அனைத்து **உயிரினங்களிடமும்** அன்பாக இருக்கும்படி **பிரசங்கிக்கின்றது. ஜென்ம சுபாவமுள்ள** மனதிற்கு இது ஏற்றதாகக் காணப்படுகிறது. **ஜனக்கூட்டங்கள்** இப்படிப்பட்ட கள்ள சுவிசேஷத்தினால் **கவர்ந்திழுக்கப்படுகின்றனர்.** இது **மனிதன் விழுந்துபோனவன்** என்ற அடிப்படை சத்தியத்தை **மறைத்து,** நாம் நமது **பாவத்தினால் மரித்துள்ளோம்** என்பதையும் **விளக்கிக்காட்ட மறுக்கின்றது.** நமக்கு இருக்கும் ஒரே வழி ‘‘மறுபிறப்பு’’ என்பதையும் போதிப்பதில்லை.

நாம் நமது **நற்செயல்களினால்** நமது இரட்சிப்பை சம்பாதித்து விடலாம் என்று **பிசாசின் சுவிசேஷம்** கூறுகிறது. **‘‘நன்றாக இரு; நன்மையையே** செய்’’என்பது தான் இதன் மூலக்கூற்று. நம்முடைய மாம்சத்தில் **நன்மையானது ஒன்றுமில்லை** என்பதை ஏற்க மறுக்கின்றது. நமது இரட்சிப்பு, நன்னடத்தையை உண்டுபண்ணும் என்ற சத்தியத்திற்குப் பதிலாக **நமது நன்னடத்தையினால் நாம் இரட்சிக்கப்பட முடியும்** என்று கூறுகிறது.

இன்று நாம் காணும் நவீன பிரசங்க மேடைகளில் கிறிஸ்தவ விசுவாச வாழ்வின் அடிப்படை சத்தியங்கள் போதிக்கப்படுவதற்குப் பதிலாக **கட்டுக் கதைகளும், உற்சாகமூட்டும்** செய்திகளும் பிரசங்கிக்கப்படுகின்றன. **பாவத்தின்** அகோரத்தையும், அதினால் உண்டாகும் **நித்திய விளைவுகளையும்** காண்பித்துக் கொடுப்பதற்கு பதிலாக, **‘‘நன்மை இல்லாதிருப்பது தான்’’** பாவம் என்று **தவறாகப் போதிக்கின்றது** இந்த **கள்ளச் சுவிசேஷம்**. ‘‘வரவிருக்கும் நியாயத் தீர்ப்புக்குத் தப்பித்துக்கொள்ளுங்கள்’’ என்ற எச்சரிப்பின் சத்தத்திற்கு பதிலாக, **‘‘தேவன் அன்பானவர்;** அவர் **யாரையும் நரகத்திற்கு அனுப்பமாட்டார்** ’’ என்று தேவனைப்பற்றி தவறாக சித்தரிக்கின்றது.‘‘**இரத்தஞ் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை’’** என்று கூறுவதற்கு பதிலாக, **‘கிறிஸ்து ஓர் எடுத்துக்காட்டு**, அவர் வழிகளில் நடக்க வேண்டும் என்று **சிலுவையற்ற, தவறான உபதேசத்தைப் போதிக்கின்றது.** எனவே தான் நாம் ரோமர் 10:43ல் வாசிக்கின்றோம், ‘‘அவர்கள் **தேவ நீதியை** அறியாமல், தங்கள் **சுயநீதியை** நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவ நீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்’’.

அவர்களின் இந்த **கள்ளச் சுவிசேஷம்** நம்பத் தகுந்ததாயும், **குறிக்கோள்களில்** சிறந்ததாயும் காணப்படலாம். எனினும் இவர்களைக் குறித்து 2 கொரிந்தியர் 11:13-15ல் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்.

" அப்படிப்பட்டவர்கள் **கள்ள அப்போஸ்தலர்கள்,** கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய **அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களா யிருக்கிறார்கள்.** அது ஆச்சரியமல்ல, **சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே.** ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக் காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சர்யமல்லவே; அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத்தக்கதாயிருக்கும்".

இன்றைக்கு காணப்படுகிற கவலைக்கிடமான நிலை என்னவென்றால், **முழு சுவிசேஷத்தையும்** பிரகங்கிக்க **சபைகளிலே தலைவர்கள்** இல்லாத நிலை ஒருபுறமிருக்க, மறுபுறம் சபைகளில் காணப்படும். **விசுவாசிகளோ,** சத்தியத்தை **தாங்களே ஆராய்ந்து படிக்க ஆர்வமுள்ளவர்களாகக் காணப்படுவதில்லை.** குடும்ப ஜெபங்களில் **வேதம் வாசிப்பது,** கடந்த கால நிகழ்வாக மாறி வருகிறது.

பிரசங்கப் பீடங்களில் **பரிசுத்த வேதாகமம்** போதிக்கப்படுகிறதில்லை; வீடுகளில் **வேதாகம வாசிக்கப்படுகிறதுமில்லை,** தொழில்நுட்பம் நிறைந்த காலகட்டத்தில், மனிதருக்கு நேரம் கிடைப்பதில்லை. **தேவனுடைய சமூகத்தில் காத்திருக்கும்** பழக்கமும் காணப்படுவதில்லை. வேதாகமத்தைத் தாங்களே தியானித்து படிக்க முடியாததினால், **தங்களுக்காக போதகர்கள் பலரை ஏற்படுத்தி,** தங்களை திருப்திப் படுத்திக்கொள்கின்றனர், இந்த போதகர்களும் **தேவனுடைய நியாயப்பிரமாணங்களைப்** போதிப்பதற்குப் பதிலாக, **சமூக சோகங்களையே** சித்தரிக்கின்றனர்.

## பாதிப் பொய் படுபயங்கரமானது

சத்தியத்தை மறுப்பது மட்டுமல்ல, **தேவ தூஷணம்**! சத்தியத்தை விட்டு **சற்று விலகுவதும்** தேவதூஷணம்தான். முழுமையாக மறுப்பதைக் காட்டிலும் **அரைகுறை பொய்** பயங்கரமானதாகும். எனவேதான், **பொய்களுக்குப் பிதாவானவன்** பிரசங்க பீடத்திற்கு ஏறும்போது, கிறிஸ்தவ அடிப்படை சத்தியங்களை **முழுமையா**க மறுக்காமல் அவற்றை ஏற்றுக்கொண்டு **அதனை தவறாக வியாக்கியானம் செய்து** தவறான முறையில் **அர்த்தங்கொள்ளச் செய்வான்.** எடுத்துக்காட்டாக, **தனிப்பட்ட தேவன் ஒருவர்** இருக்கிறார் என்ற அடிப்படை விசுவாசத்தை **மறுக்காமல்** அதனை ஏற்றுக்கொண்டு, **தேவனுடைய குணங்கள்** பலவற்றையும் தவறாக சித்தரிப்பான். **தேவன் அனைவருக்கும் பிதா** என்று கூறுவான். ஆனால் வேதம் **"நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே தேவனுடைய புத்திரராயிருக்கீர்களே"** (கலா 3:26) என்று கூறுகிறது என்பதை மறந்து போக வேண்டாம். மேலும், "... அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங்

பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்'' (யோவா1:12) என்றும் எழுதியிருக்கிறது.

**இந்த கள்ளச் சுவிசேஷம்,** தேவன் அன்பாயிருப்பதால் யாரையும் **நரகத்திற்கு அனுப்புவதில்லை** என்று **போதிக்கிறது**. ஆனால் வேதம் பின்வருமாறு கூறுகின்றது : **"ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலில் தள்ளப்பட்டான்"** (வெளி 20:15)

மேலும் பிசாசு சரித்திரத்தை இரண்டாகப் பிரித்த கிறிஸ்துவை மறுதலிப்பதில்லை. கிறிஸ்துவினுடைய **கருணையின் செயல்களைச் சுட்டிகாட்டி,** அவருடைய குணத்தின் அழகை மேம்படுத்தி, அவருடைய போதனைகளைக் கூறி இவ்வுலகில் வாழ்ந்த மனிதருள் **சிறந்த மனிதராகப் பிசாசு அவரை சித்தரிக்கின்றான்.**

**கிறிஸ்துவின் வாழ்க்கைப் புகழப்படுகிறது; அவரது மரணமோ மறைக்கப்படுகிறது**. அவரது **சிலுவை மரணம்** சொல்லப்படுவதே இல்லை; அவரது **உயிர்தெழுதல்** ஏதோ மூடநம்பிக்கையின் கொடுமைச் சிகரமாகக் கருதப்படுகிறது. கிறிஸ்துவை இரட்சகராக அல்ல, தலைச்சிறந்த **ஒரு மனிதனாக சித்தரிக்கும்** இரத்தமில்லாத, **சிலுவையில்லாத** கள்ளச் **சுவிசேஷமாகும்.**

''மனுஷருக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழிஉண்டு. அதின் முடிவோ மரண வழிகள்''(நீதி 14:12). நரகத்திற்குச் செல்லும் வழி **நல்நோக்கங்களால்** நிறைந்து காணப்படுகிறது. நரக அக்கினியில் **நல்லெண்ணம் படைத்த அநேகரை** நாம் காணமுடியும்; உண்மையான தீர்மானங்கள் உயர்ந்த நோக்கங்கள், பணத்தில் உண்மை, தான தர்மம் செய்தவர் பலரை நாம் காண முடியும். இவர்கள் தங்கள் உண்மையில் பெருமைக் கொண்டு தங்களுடைய **சுய நீதியினால்** நீதிமான்களாக மாறமுயன்றவர்கள் – **நற்குணங்கள்,** நற்பண்புகள், **கருணையுள்ளம்** படைத்தவர்கள், ஆனால் **தங்களை ஒரு நாளும் பாவியாகக் கருதியதில்லை.** எனவே **இரட்சகரின் அவசியமும் இவர்களுக்கு இருந்ததில்லை.** இதுவே **மனிதருக்குத் தோன்றுகிற** செம்மையான வழியாகும். இதுவே ஜென்ம சுபாவமுள்ள மனிதனுக்கு மிகவும் பொருத்தமானதொன்றாகும். இதுவே அநேகருடைய வழியாகவும் காணப்படுகிறது. **பிசாசு** நமது **கிரியைகளால்** நாம் **இரட்சிக்கப்பட முடியும்** என்றும் நம்முடைய கிரியைகளால் **நீதிமான்களாக்கப்பட முடியும்** என்றும் **போதிக்கின்றான்.** ஆனால், தேவன் தமது வேதத்தில் என்ன கூறியுள்ளார் என்பதைக் கவனியுங்கள்.

**கிருபையினாலே விசுவாசத்தைக்** கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் : இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு: ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது

**கிரியைகளினால் உண்டானதல்ல** (எபே 2:8,9). நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சிக்காமல் **தமது இரக்கத்தின்படியே மறுஜென்ம முழுக்கினாலும்,** பரிசுத்த ஆவியினுடைய **புதிதாக்குதலினாலும்** நம்மை இரட்சித்தார் (தீத்து 3:5).

இயேசு கிறிஸ்துவினுடைய வாழ்க்கை முறையைப் பற்றியும், அவருடைய பிறப்பு மற்றும் போதனைகளைக் குறித்தும் ஆயிரங்களைத் தங்களதுசிறுவயதிலிருந்தே சிறுவர் வேதாகமப் பள்ளிகள் மூலமாக கற்று அறிந்திருக்கலாம். மேலும் கிறிஸ்துவை பின்பற்ற தீவிர ஆர்வம் காண்பிக்கலாம். இப்படிப்பட்டவர்கள் வளர்ந்த, ஆண்டவரை அறியாத உலகத்திற்கு செல்லும்போது, நாத்திக கொள்கைவாதிகள் இவர்களது விசுவாசத்தை கேலி செய்யும்போது **நாங்கள் கிறிஸ்துவை விசுவாசக்கின்றோம்** என்று இவர்கள் கூற முடியும்.

ஆனால் இவர்களது விசுவாசத்தை சோதித்து பார்க்கும்போது **கிறிஸ்துவைப்பற்றிய பிர விஷயங்களை** விசுவாசிக்கின்றனர், ஆனால் **கிறிஸ்துவையோ தனிப்பட்ட விதத்தில்** இன்னும் **இவர்கள் அறியவில்லை** என்று தான் சொல்ல முடியும். அவர்கள் இயேசு கிறிஸ்து வாழ்ந்தார் என்று விசுவாசிக்கின்றனர். இப்படி விசுவாசிப்பதால் **தாங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டோம்** என்று கருதுகின்றனர். ஆனால் இவர்கள் **தங்கள் வாழ்க்கையை** முழுமையாக அவர் கரத்தில் ஒப்புக்கொடுக்கவில்லை. எனவே, அவர்கள் விசுவாசிக்கவும் இல்லை என்று தான் கூற முடியும்.

மனிதனுக்கு தோன்றுகிற மற்றுமொரு **மரண வழி, ஆண்டவரை அறியாமல்போவது தான்.** நமது வாழ்க்கை அவரிடம் ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும்: நமது இருதயம் அவரால் ஆளப்பட வேண்டும். ஆண்டவரைப் பற்றி **மூளை அறிவு** மரண வழிகளுள் ஒன்று. இன்னும் சொல்லப்போனால், இது பிசாசின் சுவிசேஷத்தின் மற்றுமொரு அங்கமாகும்.

## நாம் எங்கு நிற்கிறோம்?

மரணத்திற்கு நேராக நடத்தும் விசாலமான வழியை விட்டு விலகி விட்டோமா? கிறிஸ்துவின் அன்பு நம்மை அவரிடமிருந்து பிரிக்கும் சகல காரியங்களைக் குறித்த வெறுப்பை ஏற்படுத்தியுள்ளதா? அவர் நம்மை ஆளுகை செய்ய நாம் இடங்கொடுப்போமா? (லூக் 19:4). அவருடைய நீதியையும், இரத்தத்தையும் மட்டுமே சார்ந்து நமது ஆவிக்குரிய வாழ்வை காட்டுகிறோமா?

**வெளிப்புறமான பக்தியின்** வேஷங்களான **ஞானஸ்நானம், திடப்படுத்துதல்,** ஒரு குறிப்பிட்ட **சபையின் அங்கத்தினர்** ஆகுதல், **சமூக மதிப்பிற்காக** சபைக்கு செல்லுதல் போன்றவை **மரணத்திற்கு நேராக நடத்தும் வழிகளாகும்.** இதில் ஆவிக்குரிய மரணமும் மற்றும் நித்திய மரணமும் அடங்கும். நம்முடைய நோக்கங்கள் எவ்வளவு தூய்மையாக

இருந்தாலும் : நம்முடைய எண்ணங்கள் எவ்வளவு உண்மையாக இருந்தாலும் நம்முடைய முயற்சிகள் எவ்வளவு கடின உழைப்பாக இருந்தாலும் மனம் திரும்புதலின் அனுபவம் நம்மில் இல்லாதிருந்தால் கர்த்தர் நம்மை அவர் பிள்ளையாக ஏற்றுக்கொள்ளமாட்டார்.

அந்த கள்ளச் சுவிசேஷத்தினுடைய மற்றுமொரு அங்கம், பிரசங்கியார் **கிறிஸ்துவின் சிலுவை மரணத்தைக் குறித்து போதித்துவிட்டு,** பின்பு கிறிஸ்துவை விசுவாசிக்கச் சொல்வதாகும். இப்படி நடத்தப்பட்ட ஆயிரக்கணக்கான ஆத்துமாக்கள் தாங்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டோம் என்று கூறுகின்றனர். ஆனால் கிறிஸ்துவோ, **நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்** (லூக் 13:3) என்று கூறினார், **மனந்திரும்புதல் என்பது பாவத்தை வெறுப்பதாகும்** பாவம் செய்வதினால் கவலைகொள்வதாகும் பாவத்தை விட்டு விலகுவதாகும். பரிசுத்த ஆவியானவர் நமது இருதயத்தில் கிரியை செய்வதால் நிகழும் நிகழ்வாகும். உடைந்த உள்ளமே கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்.

தேவ குமாரன், மனிதனை பாவத்தில் இரட்சிக்க வரவில்லை, பாவத்திலிருந்து இரட்சிக்க வந்தால் (மத் 1:21). பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவது, நமது சித்தத்தை வெறுத்து, நமது வழிகளைவிட்டு விலகி சுய விருப்பத்தை மறந்து, **தேவனுடைய ஆளுகைக்குக் கீழ் வருவதாகும்** (ஏசா 55:7). கிறிஸ்துவின் நுகத்தை நம்மேல் எடுக்காமல், தன்னுடைய வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளாலும் **தேவனைப் பிரியப்படுத்த வேண்டும்** என்ற எண்ணமில்லாமல் கிறிஸ்துவின் முடிந்த ஊழியத்தின்மேல் நான் இளைப்பாறுகிறேன் என்று கூறுபவர் பிசாசினால் வஞ்சிக்கப்பட்டவராவார்.

வாசகரே, **கிறிஸ்துவுக்காக** உழைத்தும், **அவருடைய** நாமத்தில் பிரசங்கித்தும், **பலரால்** அறியப்பட்டும், **சபையில்** உயர்த்தப்பட்டும், இருந்தாலும் சரியான மனம் திரும்புதல் இல்லாமல் போனால் **தேவனால் நாம் அறியப்படாமல்** இருக்க **வாய்ப்பிருக்கிறது.** எனவே நாம் எங்கு காணப்படுகிறோம் என்பதை உணருவது மிக முக்கியமானதாகும். நமது விசவாசத்தை பரிசோதித்து, நம்முடைய வாழ்க்கையை தேவ வசனத்தினால் அளந்து பார்த்து **நாம் பிசாசினால் வஞ்சிக்கப்பட்டுள்ளோமா?** என்று நிதானிக்க வேண்டும் நமது வீட்டை மண்ணிலே கட்டுகிறோமா? அல்லது பாறையாகிய இயேசு கிறிஸ்துவின் மேல் கட்டுகிறோமா? என்று கவனித்தறிய வேண்டும்.

பரிசுத்த ஆவியானவர் தாமே நம்முடைய இருதயங்களை ஆராய்ந்து, நமது சித்தங்களை உடைத்து, தேவனுக்கு விரோதமான பகையை விலக்கி, ஆழமான, **உண்மையான மனந்திரும்புதலை** ஏற்படுத்துவாராக, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியை நோக்கிப் பார்த்து தேவனிடமாய் திரும்புவோம். ஆமென் !

----x----

**எச்சரிக்கை !**

# இந்தியா நாடு விற்கப்படுகிறது...

இந்தியாவின் முதல் 10 பணக்காரர்கள் இந்தியாவின் அனைத்து அரசாங்க பொது துறைகளை விலைக்கு வாங்கப்போகிறது. இப்போது **விமான** நிலையம், **ரயில்வே** போன்ற பெரிய பெரிய இந்திய அரசாங்க பொதுத்துறைகள் விற்பனைகள் செய்தாகிவிட்டது. இவர்கள் **வங்கிகளையும்** விலைக்கு வாங்கப் போகிறார்கள்.

**விவசாய துறை** போன்ற பலதும் விலைபேசப்படுகின்றன. கீழ்காணும் இந்திய பெரும் பணக்காரர்கள் வசம் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலத்திலும் உள்ள பல **பொது துறைகள்** அந்தந்த மாநில மக்களின் **அனுமதி இல்லாமல்** விற்றுப்போனது. சில மாதங்களுக்கு முன்பே **AIRINDIA** விமானங்கள் அனைத்தையும் இந்தியாவின் பெரும் வியாபாரியான **டாடா** அவர்கள் விலைக்கு வாங்கிவிட்டார்.


**கீழ்காணும் படங்களில் உள்ளவர்கள் இந்தியாவின் பணக்காரர்கள் அட்டவணையில் முதல் இடம் பிடித்துள்ளனர்.**



முகேஸ் அம்பானி



கவுதம் அதானி



சிவநாடார்



இந்துஜா




எல்.என். மிட்டல்



சைரஸ் பூனாவாலா



ராதாகிஷன் தமானி



வினோத் சாந்திலால்



குமார் மங்கலம்



ஜெய் சவுத்ரி

இவர்கள் கட்டுப்பாட்டில் அனைத்து **பொது துறைகளும்** வந்துவிட்டால் ஏழை விவசாயிகளுக்கு லோன், **மின்சார சலுகை,** பொங்கல் இனாம், தீபாவளி போனஸ், பென்ஷன் எதையும் இவர்களிடம் எதிர்பார்க்க முடியாது,

**ஒரு** நாடு, **ஒரு** மதம், **ஒரே** பாஷை என்ற கொள்கை கொண்ட இப்போதுள்ள இந்திய அரசியல் பொருளாதார கொள்கையால் இந்தியாவில் **உள்நாட்டு** கலவரம், **உள்நாட்டு** போர் உண்டாக வாய்ப்புண்டு. அதற்கு அடையாளமாக சமீபத்தில் இந்திய **தேர்தல் ஆனையத்தைம் 3 தலைமை ஆணையரர்கள்** பிரதமரின் **தலைமை செயலரை** இரகசியமாக சந்தித்துள்ளனர். இது தேர்தல் ஆணையர்களை பிரதமரின் இரகசிய கட்டளைக்கு கீழ்படிய வைப்பதற்கு ஒப்பாகும். சட்டப்படி **தேர்தல் ஆனைய தலைவர்கள்** தனித்து இயங்குபவர்கள்.

இந்த சட்டத்தின் இரகசியத்தை முன்னாள் தேர்தல் ஆணையாளர் திரு. **சேஷன்** அவர் பதவி ஏற்றதும் தெளிவுபடுத்தினார். அப்போது **பிரதமராக** இருந்த காங்கிரஸ் கட்சியை சேர்ந்த பிரதமர் **திரு. நரசிம்மராவ்** அவர்கள் திரு. **சேஷன்** அவர்களை **தன்னை நேரில் வந்து** சந்திக்க அழைத்தார். உடனே **சேஷன்** சட்டத்தை காண்பித்து **தலைமை தேர்தல் அதிகாரிக்கு பிரதமர்கட்டளையிட முடியாது.** பிரதமர்தான் **என்னை வந்து காண வேண்டும்.** மற்றபடி **ஜனாதிபதி** அழைத்தால் மட்டுமே நான் போவேன் என்றார். **பிரதமர்** அதை **கவுரவ பிரச்சனையாக** எடுத்துக்கொண்டு **தலைமை தேர்தல்** அதிகாரிகளாக **மேலும் இரண்டு பேரை** நியமித்தார். அதனால் இனி **சேஷன்** சுதந்திரமாக தீர்மானம் எடுக்க முடியாது. **ஷேசன்** காலம் மாறிவிட்டது. ஆனால் **சட்டம் மாறவில்லை.** சட்டத்துக்கு புறம்பாக **தேர்தல் ஆனையம்** தலைமை செயலரை சந்துள்ளது பெரும் குற்றமாகும்

வரப்போகிற MP தேர்தலில் BJP வெற்றிபெற சாதகமாக ஏதோ திருட்டுதனமான ஆலோசனை நடத்துவார்களோ என்று எதிர்கட்சிகளும் நாடும் சந்தேகிக்கிறது. ரானுவத் துணையோடு **சர்வாதிகார ஆட்சி இந்தியாவில்** ஏற்படலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது, இந்தியாவுக்கு **அபாயம்** மிக அருகே வந்துகொண்டிருக்கிறது. **நேர்மையான ஆட்சிக்காக** விசுவாசிகள் ஜெபிப்போம்.

- ☐ வாசகர்கள் யாவரும் ஜாமக்காரன் ஊழியங்களுக்காக அனுப்பிய காணிக்கைகள் M.O., D.D., காசோலை NEFT, Online பணமாற்றம் செய்து நீங்கள் அனுப்பிய காணிக்கைகள் யாவும் மாதம் தாவறாமல் கிடைக்கிறது. யாவருக்கும் நன்றி கூறுகிறேன்.
- ☐ வாசகர்களின் குடும்பத்துக்காக தினசரியும் மாதம் இரண்டு முறையும் நான் செய்யும் உபவாச ஜெபங்களிலும் வசகர்களுக்காக ஜெபிக்கிறேன்.

# நெல்லை St. John's கல்லூரி பிறந்த கதை....

## சி. எம். காலேஜ், திருநெல்வேலி

**சி. எம். காலேஜ் திருநெல்வேலி** என்பது ஒரு இரண்டாம்தர கல்லூரியாகும். (Second Grade College) அன்றைய நாட்களில் **4 வருஷக் காலேஜ்** படிப்பை **இரண்டு பிரிவாகப்** பிரித்தனர். முதல் 2 வருஷப் படிப்பை **இண்டர்மீடியேட்** (intermediate) என்றும் பிந்தின 2 வருஷ படிப்பை பி. ஏ (B.A.,) என்றும் பிரித்தனர். நான்கு வருஷப் படிப்பையும் ஒருமித்து படித்துக் கொடுக்கும் காலேஜ்களும் அன்று இருந்தன. அவை (First Grade College) என்றழைக்கப்பட்டன.

முதல் **இரண்டு வருஷப் படிப்பை மட்டும்** தனியாக படித்துக் கொடுத்த **காலேஜ்களும்** இருந்தன். அவை (Second Grade College) என்றழைக்கப்பட்டன. திருநெல்வேலி **சி. ம். காலேஜ்ஜில் முதல் இரண்டு வருஷப் படிப்பு மட்டும்** சொல்லிக் கொடுக்கப்பட்டபடியால் அது (Second Grade College) என்றழைக்கப்பட்டபது. இந்த **சி.எம். காலேஜ்** இன்று **ஷாப்டர் ஹை ஸ்கூல்** இருக்கும் கட்டிடத்தின் மேல் மாடியில் இருந்தது. இந்த **சி.எம். காலேஜ்** தான் பின்னர் **பாளையங்கோட்டைக்கு** மாற்றப்பட்டு **தூய யோவான் கல்லூரி (St. John's College)** என்ற **புதுப்பெயருடன்** சிறப்பு பெற்று இன்றும் விளங்குகிறது.

**சி.எம். காலேஜை** சாதாரண மக்கள் **வேறே இரண்டு பெயர்கள்** வைத்து அழைத்தார்கள். ஒன்று **வயல்காட்டுக் காலேஜ்** என்பது மற்றொரு பெயர் **ஷாப்ட்டர் காலேஜ்** என்பது. காலேஜை சூழ **வயல்கள் இருந்தபடியால்** அதை **வயல்காட்டுக் காலேஜ்** என்றழைத்தனர். அந்த நாட்களில் சி.எம். காலேஜிலிருந்த **திருநெல்வேலி ஜங்ஷன்** வரைக்கும் **கடைகளோ கட்டங்களோ** கிடையாது. சாலையின் இரு பக்கங்களிலும் **வயல்கள் தான்.** மன ரம்மியமாக ஒரு காட்சியளித்தது.

திரு. **ஷாப்ட்டர் துறை** சி.எம். காலேஜ்க்குப் **பிரின்சிப்பாலாக** இருந்தபடியால் சாதாரண ஜனங்கள். அன்று அதை **ஷாப்ட்டர் காலேஜ்** என்றும் அழைத்தனர். எல்லாக் காலேஜ்களையும் அந்தந்தக் **காலேஜ் பிரின்சிப்பால்களின் பெயரை** வைத்து அழைப்பதில்லையே சி.எம். காலேஜை மட்டும் அந்தக் காலேஜ் பிரின்சிப்பாலின் பெயரை வைத்து அழைத்ததற்குக் காரணம் என்ன? **ஷாப்டர் துரை** அவர்கள் நீண்ட காலமாக

(ஏறக்குறைய 40 வருஷங்கள்) அந்தக் காலேஜீக்கு **பிரின்சிப்பாலாக** இருந்தது ஒரு காரணம். மற்றொரு காரணம் **ஷாப்டர் துரை மக்களின் அன்பைக் கவர்ந்துகொண்ட ஒரு பெரியார்.** தமிழ் நாட்டிலே பிறந்த தமிழனைப் போல் **தமிழ் பேசி,** தமிழ் மக்களுடன் அன்புடன் பழகிய தமிழர்களின் அன்பர் அவர் மாணவர்களுக்குத் **தந்தை போன்றவர்.**

சி.எம். காலேஜிலே படிக்கும் மாணவர் அன்று பெரிய ஆட்களாக வளர்ந்த வயதினரை போல இருந்தனர். அவர்களை பார்த்தால் மாணவர்களைப்போல் தோன்றாது. அன்று காலேஜிலே **புதிதாக சேர்ந்தவர்கள்** அந்த பெரிய மாணவர்களைப் பார்த்து பயத்தினால் கலங்கிய கண்களுடன் காணப்பட்டனர். அன்று அண்ணாச்சி **சத்திய சாமுவேல்** அவர்கள் மாணவர்களை **சின்னப் பயல்கள்** என்றே குறிப்பிடுவார். **சின்னப் பயல்கள்** என்று சொன்னாலும் **அது பாசத்துடன்** கூறப்பட்ட வார்த்தைகளே (with a spirit of condescension)

இதுதான் இந்தியாவில் பிரசித்தி பெற்ற (St. John's College). இந்த கல்லூரியில் படித்தவர்கள்தான் தமிழ்நாட்டில் பிரசித்திபெற்ற **பிரசங்கிமார்களாகவும்,** ஊழியர்களாகவும் வாழ்ந்து மரித்தும் போனார்கள்.

இந்த கல்லூரியில் வேலை செய்த **லெக்சரர்கள்** சிலர் கல்லூரியில் பயின்ற ஏராளமான **மாணவர்களை** இரட்சிப்புக்கு நேராக நடத்தினார்கள். அதனால் (St. John's Collegeல் படித்தாலே அதை மிகவும் **பெருமையாக** எண்ணினார்கள். அது **பெரிய ஆசீர்வாதம்** என்றும் கருதிய காலம் உண்டு. அந்த கல்லூரியில் படித்த பெரும்பான்மையானவர்கள் மிக **உயர்ந்த உத்யோகத்திலும், பதவியிலும் இருக்கிறார்கள்,அவர்கள்** இன்னும் காலேஜை நினைத்து நன்றியுடன் வாழ்கிறார்கள்.

- ☐ ஆனால் இன்றைய St. John's Collegeல் அன்றைய நாட்களின் ஆசீர்வாதம் குறைந்து காணப்படுவது வேதனைக்குறிய விஷயம் என்று அங்கு படித்த பழைய மாணவர்கள் கூறி வேதனைப்படுகிறார்கள். அதற்கு காரணம் இன்றைய காலங்களில் **லெக்சரர்** வேலை, **புரோபசர்** வேலைக்கு **பல லட்சங்கள்** டையோசிஸ் நிர்வாகிகளுக்கு **லஞ்ஜமாக கொடுத்து** சீனியாரிட்டியின் அடிப்படையில் அல்லாமல் **பெரும் தொகையின்** அடிப்படையில் பதவியை பெறுகிறார்கள். ஆகவே பெரும்பாலானவர்கள் **கடமைக்கு வேலை** செய்வதுபோல் மாணவர்களுக்கு பாடம் சொல்லி கொடுக்கிறார்கள். ஆகவே அன்றைய **கல்லூரியின் தரம்** மிகவும் குறைந்து விட்டது.

(C.M. College) St. John's College தொடங்க காரணமாயிருந்தவர்களுக்காக கர்த்தரை துதிக்கிறேன். தொடர்ந்து ஜெபிப்போம்.

O for the touch of a Vanished hand
And the sound of a voice that is still

என்று சொல்லி மனம் உருக வேண்டியதிருக்கிறது.



*New Year Begins*
*let us pray, that it will be a year with*
*New Peace, New Happiness.*

*God bless you through out the New year*

# *Happy New Year - 2022*

DECEMBER 2021

## Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.